செ.வெ.எண் 540

**செய்தி வெளியீடு 22 – 8 – 2007**

## தமிழில் பெயர் கொண்ட திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரி விலக்கு

## தகுதியான படங்களைப் பரிந்துரை செய்திட குழு அமைப்பு

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

தமிழில் பெயர் கொண்ட புதிய மற்றும் பழைய திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரியில் இருந்து முழுமையான வரி விலக்கு அளிக்கும் திட்டம் தமிழக அரசினால் 2006ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது திரையிடப்படும் பல திரைப்படங்களின் தலைப்பு தமிழ்ப் பண்பாட்டிற்கும் கண்ணியத்திற்கும் குந்தகம் விளைவிப்பதாக உள்ளது என்றும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தரத்திற்கும் உகந்ததாக இல்லை என்றும், அரசு வழங்கியுள்ள கேளிக்கை வரிச் சலுகையின் நோக்கத்திற்கு முரணாக உள்ளது என்றும் தமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, இனித் திரையிடப்படும் பழைய மற்றும் புதிய தமிழ்த் திரைப்படங்களின் தமிழ்ப் பெயர்கள் தமிழ்ப் பண்பாட்டிற்கு உகந்ததாகவும், கண்ணியமானதாகவும் உள்ளதா என்பதை ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரை செய்திட வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள், செய்தித்துறைச் செயலாளர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட குழு ஒன்றினை அமைத்து முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

• • •

வெளியீடு:- இயக்குநர்
செ.ம.தொ
செ-9